**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS.187/2023**

நாள்.11.02.2026

**வா.சா.1. 1, 2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வாதி முஸ்தபா எனது கணவர். 1ம் பிரதிவாதி ஜீலைகா பீவி எனது மாமியார். 2ம் பிரதிவாதி ரஹமத் நிஷா எனது கணவருடன் பிறந்த அக்கா என்றால் சரிதான். எனக்கும், எனது கணவருக்கும் எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் 2003–ல். அதற்கு முன்பாக எனது கணவர் குடும்பத்தில் ஏற்பட்ட விவரங்கள் ஏதும் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரின் வீட்டில் உள்ளவர்கள் எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது பாட்டனார் வழியின் மூலமாக சொந்தம். அதனால் எனக்கு தெரியும். எனது திருமணத்திற்கு முன்பாக எனது கணவரின் வீட்டிற்கு வந்துள்ளேனா என்றால் வந்துள்ளேன். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். தாவா ஏ பட்டியல் சொத்து யாருக்கு சொந்தமானது என சொல்லியுள்ளேன் என்றால் எனது கணவருக்கு சொந்தமானது என சொல்லியுள்ளேன். எனது கணவருக்கு எப்படி சொந்தம் என்றால் எனது கணவரின் பாட்டி வழி சொத்து. தாவா பி பட்டியல் சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் எனது மாமனாரும், எனது கணவரும் வெளிநாட்டிற்கு சென்று சம்பாரித்து வந்த பணத்தை கொண்டு

குடும்ப நலத்திற்காக வாங்கப்பட்ட சொத்து. இந்த வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் மறுத்து தவறு என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் எதிர் வழக்குரையில் தவறு என்று சொல்லவில்லை என சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். புல எண்.40/3–ல் மொத்த விஸ்திர்ணம் 64 சென்ட் என்றால் சரிதான். 25.02.1986ம் தேதியில் வழக்கு ஏ பட்டியல் சொத்தில் தென்புறம் உள்ள 34 சென்டை எனது மாமியார் அவரது பெயரில் கிரயம் வாங்கியதற்கான கிரயப்பத்திரம் அசல் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் உள்ள சொத்தை எனது மாமனார் பணம் அனுப்பி எனது மாமியார் பெயரில் வாங்கப்பட்டது. அந்த அசல் கிரயப்பத்திரம் **பி.வா.சா.ஆ.1** ஆகும். 11.05.1986ம் தேதி பதிவாகாத விடுதலை பத்திரம் மூலம் 1ம் பிரதிவாதி வழக்கு ஏ பட்டியல் ஐட்ட சொத்தில் வடபுறம் 34 சென்டை பிரதிவாதி அடைந்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் தவறு. ஏ பட்டியல் உள்ள வடபுறம் 34 சென்ட் சொத்து என் குடும்பத்திற்கு எப்படி சொந்தம் என்றால் குடும்ப கூட்டு சொத்தாக தான் உள்ளது. 11.05.1986–ல் எனது மாமியார் கிரயம்

பெற்ற சொத்தை அவரது மகளான 2ம் பிரதிவாதிக்கு 11.05.2009ம் தேதி இனாம் சாசனம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் மேற்படி எழுதிக்கொடுத்துள்ள விவரம் எனக்கு 2023–ல் தான் தெரியும். ஆனால் எனது மாமியாருக்கு குடும்ப சொத்தை எழுதிக்கொடுக்க உரிமையில்லை. அந்த செட்டில்மெண்ட் ஆவணம் அசல் **பி.வா.சா.ஆ.2** ஆகும். 25.02.1986–ல் எனது மாமியார் கிரயம் வாங்கிய சொத்தினை கடந்த 20.05.2019ம் தேதி தனது மகளான 2ம் பிரதிவாதிக்கு கிரய ஆவணமாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் 2023–ல் தான் எனக்கு தெரியும். எனது மாமியாருக்கு பொது குடும்ப சொத்தை தனியாக எழுதிக்கொடுக்க உரிமையில்லை. 25.02.1986–ல் ஏற்பட்ட கிரய சாசனம் அசல் **பி.வா.சா.ஆ.3** ஆகும். தாவா ஏ பட்டியல் சொத்தில் உள்ள 2, 3 ஐட்ட சொத்துக்கள் 25.11.1982ம் தேதியில் 1ம் பிரதிவாதியால் கிரயம் பெறப்பட்ட சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கிய சொத்தில் 648.09 சதுர மீட்டரை மட்டும் தனது மகளான 2ம் பிரதிவாதிக்கு கடந்த 14.07.2010ம் தேதியில் இனாம் சாசனமாக எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளார் என்றால் பத்திரம் பதிவு செய்து கொண்டது எனக்கு தெரியாது. தாவா ஏ பட்டியல் சொத்தில் கண்ட அனைத்து சொத்துக்களும் என் கணவருக்கு பூர்வீகமான சொத்து என சொல்லியுள்ளது தவறு என்றும், அந்த சொத்துக்களை 1ம் பிரதிவாதி சுயமாக

கிரயம் பெற்ற சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா பி பட்டியலில் 2 இன சொத்தை 2ம் பிரதிவாதியால் கடந்த 17.05.1981–ல் சுல்தான் ராவுத்தர் என்பரிடம் இருந்து கிரயம் வாங்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான். அந்த கிரயப்பத்திரத்தின் அசல் **பி.வா.சா.ஆ.4** ஆகும். தாவா பி பட்டியல் உள்ள ஆ–வில் உள்ள 1, 2 இன சொத்துக்களின் மொத்த விஸ்திர்ணம் 1 ஏக்கர் 34 சென்ட். மேற்படி சொத்தை 1ம் பிரதிவாதி 26.06.1978–ல் 1 ஏக்கரை ஷேக் தாவூது என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். எனது மாமனாரின் பணத்தை கொண்டு தான் கிரயம் பெற்றுள்ளார். அந்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5** (வாதி தரப்பு வழக்கறிஞர் பிரதிவாதி தரப்பு ஆவணங்களை வாதி தரப்பில் குறியீடு செய்ய ஆட்சேபனைக்குட்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது) ஆகும். மேற்படி 1 ஏக்கர் 34 சென்ட்டில் மீதமுள்ள 34 சென்ட்டினை 14.03.1985ம் தேதியில் 1ம் பிரதிவாதி ஷேக் தாவூது ராவுத்தார் மற்றும் பாத்திமா பீவி ஆகியோரிடம் கிரயம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் எனது மாமியாரின் தாயார் கொடுத்த சொத்து. கிரயம் வாங்கவில்லை. தாவா பி பட்டியலில் உள்ள ஆ–வில் 3வது சொத்து எனது குடும்பத்திற்கு சொந்தமான சொத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல. எங்கள் குடும்பத்தில் நூருதீன்

ராவுத்தர் மகன் ஷேக் தாவூது என்பவர் உள்ளாரா என்றால் ஞாபகமில்லை. தாவா பி பட்டியலில் உள்ள ஆ–வில் 3வது சொத்தானது நூருதீன் ராவுத்தர் மகன் ஷேக் தாவூது என்பவருக்கு சொந்தமான சொத்து என்றும், எங்கள் குடும்பத்திற்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா பி பட்டியலில் 1ம் இன சொத்தில் தான் என கணவருக்கு பாகம் பெற உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் எப்போது பிறந்தார் என்றால் எனக்கு தெரியாது. எனது கணவரின் வயது 52. எனது கணவர் 1974ல் தான் பிறந்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமியார் கிரயம் வாங்கிய சொத்துக்கள் அனைத்தும் 1986ம் ஆண்டிற்கு முன்பு தான் என்றால் சரிதான். 1986–ல் எனது கணவரின் வயது 12. 1ம் பிரதிவாதி பெயரில் கிரயம் வாங்கிய சொத்துக்கள் வாதியின் சம்பாத்தியத்தை கொண்டு கிரயம் வாங்கப்பட்டது என கூறினால் அது தவறு என்றால் சரியல்ல. இஸ்லாம் மார்க்கத்தின் படி கணவர், மனைவிக்கு மகர் தொகை கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு கிடைத்த மகர் தொகையைக் கொண்டும், அவருக்கு சொந்தமான நகைகளை விற்பனை செய்து கிடைத்த பணத்தினை கொண்டும் 1ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்துக்கள் கிரயம் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது மாமனார், எனது மாமியாருக்கு அனுப்பி

தொகையினை கொண்டு தான் தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதி பெயரில் கிரயம் பெறப்பட்டுள்ளது என கூறியுள்ளீர்கள் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் மாமியார் வசம் உள்ளது. எனது மாமியார் வசம் என்ன ஆவணம் உள்ளது என்றால் IOB வங்கியில் பணம் அனுப்பியதற்கான ஆவணங்கள் உள்ளது. அந்த IOB வங்கியில் உள்ள ஆவணத்தை வாங்கி என்னால் இந்த வழக்கில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் என் கணவரை தான் கேட்க வேண்டும். எனது வழக்குரையில் எனது கணவர் 1ம் பிரதிவாதியிடம் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன். எவ்வளவு பணம் என்றால் 60 லட்சம். அதற்கான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எனது கணவர் 1ம் பிரதிவாதிக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றும், அதற்காக 1ம் பிரதிவாதி அவருக்கு சொந்தமான சொத்துக்களை எழுதிக்கொடுப்பதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் எந்த ஆண்டில் வெளிநாடு சென்றார் என்றால் 1996–ல். 2ம் பிரதிவாதிக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் ஞாபகமில்லை. எனது கணவர் வெளிநாடு செல்வதற்கு முன்பாகவே 2ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் ஞாபகமில்லை. என் கணவர் வெளிநாடு செல்வதற்கு முன்பாகவே 2ம்

பிரதிவாதிக்கு திருமணம் நடைபெற்றது என்றும், அதனால் எனது கணவர் 2ம் பிரதிவாதிக்கு திருமண செலவுகள் ஏதும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா பி பட்டியலில் உள்ள 1ம் இன சொத்தின் புல எண்.15/2ஏ மட்டும் தான் என் கணவரின் குடும்பத்திற்கு சொந்தமான சொத்து என்றும், அந்த சொத்தில் மட்டும் தான் எனது கணவருக்கு பாகம் கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. மற்ற தாவா சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி அவருக்கு கிடைத்த மகர் தொகை மற்றும் அவருக்கு சொந்தமான தங்க நகைகளை விற்பனை செய்து அதில் கிடைத்த பணத்தை கொண்டு அவரின் தனிப்பட்ட நலனுக்காக கிரயம் வாங்கினார் என்றும், அந்த சொத்தில் என் கணவருக்கு எந்த வித பாகம் பெற உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா ஏ பட்டியலில் உள்ள சொத்துக்களுக்கு தவறுதலாக வருவாய் துறை ஆவணமான பட்டாவில் என் முன்னோர்களின் பெயர்கள் இருந்ததால் அதை காரணமாக கொண்டு எனது குடும்பத்திற்கு சொந்தமான பூர்வீக சொத்துக்கள் என பொய்யாக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியால், 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள பதிவு செய்து கொடுத்துள்ள ஆவணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லாது என எந்த பரிகாரமும் இந்த வழக்கில்

கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா பி பட்டியலில் 1ம் இன சொத்தை தவிர மற்ற சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதி யாருக்கு வேண்டுமானாலும் எழுதிக்கொடுக்க உரிமை உண்டு என்றும், அந்த சொத்தில் எனக்கு பாகம் ஏதும் கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இஸ்லாமிய சட்டத்தின் படி சொத்தின் உரிமையாளர் உயிருடன் உள்ள நிலையில் வாரிசுகள் யாரும் பாகம் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.